வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முடியும். இந்த வகையில், நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உங்களுக்குப் பராமரிப்பு வழங்கப்படமுடியும்.

## தொண்டர் ஆதரவு

குணப்படுத்தமுடியாத நோய்வாய்ப்பட்ட ஒருவரைப் பராமரித்தல் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்த முடியும். எமது பயிற்சி பெற்ற தொண்டர்கள் செய்முறைரீதியான உதவியையும் உளரீதியான ஆதரவையும் வழங்குவதன் மூலம் பராமரிப்பவர்களுக்குத் துயருதவி அளிப்பார்கள்.

## உங்களுக்கு ஏதாவது விசேடமான கலாசார/மொழித் தேவைகள் உள்ளனவா?

உங்களது நோவாற்றும் பராமரிப்புக் குழு உங்களது கலாசாரம், மொழி ஆகியவை பற்றி உணர்ந்து செயலாற்ற முயற்சி செய்யும். உங்களுக்கு உணவு, ஆன்மீகம் சம்பந்தப்பட்ட அல்லது பிறிதொரு பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு சம்பந்தப்பட்ட ஏதாவது விசேடமான கலாசாரத் தேவைகள் இருப்பின் தயவு செய்து நீங்கள் அவை பற்றி எமக்குக் கூறுங்கள். உங்களுக்கு உரைபெயர்ப்பாளரின் உதவி தேவைப்படின் தயவு செய்து அது பற்றி எமக்குக் கூறுங்கள். உரைபெயர்ப்பாளர் சேவைகள் இலவசமாகவும் இரகசியமாகவும் இருக்கும்.

**Health Care Interpreter Service**
(சுகாதாரப் பராமரிப்பு உரைபெயர்ப்பாளர் சேவை)
இலவசமானதும் இரகசியமானதுமான உரைபெயர்ப்பாளர் சேவை கிடைக்கும்.
24 மணித்தியாலங்கள், வாரத்தில் ஏழு நாட்களும் ஓர் உரைபெயர்ப்பாளரை ஒழுங்கு செய்வதற்கு எமது பணியாளரைக் கேளுங்கள்.
AUSLAN உரைபெயர்ப்பாளர்களும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.
(02) 9840 3456.

## உதவிக்கு அல்லது தகவலுக்கு யாரைக் கேட்கலாம்.

- உங்கள் பொது வைத்தியர்
- உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் விசேடத்துவ வைத்தியர்
- உங்கள் உள்ளூர் வைத்தியசாலை
- உங்கள் நோவாற்றும் பராமரிப்புச் சேவை

தயவுசெய்து, ஏதாவது விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:

நீங்கள் பென்றித் அல்லது புளூ மவுன்ரின்ஸ் பகுதியில் வசிப்பவர்களாயின் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 04:30 மணி வரை

**1800 013 101**
என்ற தொலைபேசி எண்ணில்

அல்லது: நீங்கள் ஹோக்ஸ்பெறி பகுதியில் வசிப்பவர்களாயின் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 12:30 மணி வரை அல்லது மாலை 01:30 மணி தொடக்கம் 04:30 மணி வரை

**(02) 4560 5714**
என்ற தொலைபேசி எண்ணில்.

*The production of this pamphlet has been supported by a grant from NSW Health.*

*The design concept of this pamphlet is courtesy of the Palliative Care Council of South Australia, Palliative Care Victoria and Palliative Care Australia.*

WAHS 307 March 2004

TAMIL

PALLIATIVE CARE SERVICES

# நோவாற்றும் பராமரிப்பு

# துயருதவி ஆறுதல் ஆதரவு

*குணப்படுத்தமுடியாத நோய்வாய்ப்பட்ட அன்புக்குரியவரைப் பராமரித்தல்*




Wentworth Area Health Service

# நோவாற்றும் பராமரிப்பு என்பது யாது?

குணப்படுத்துவதற்கு இயலாத நோயினால் துன்புறுவோர்க்கு ஆதரவாக இருப்பதே நோவாற்றும் பராமரிப்பு.

நோவாற்றும் பராமரிப்பின் நோக்கம் இயலக்கூடிய அளவு சிறந்த தரமான வாழ்க்கையை ஒவ்வொருவருக்கும் வழங்குவதாகும். நோயாளி, பராமரிப்பவர் ஆகிய இருவரினதும் தேவைகளைக் கருத்தில் கொண்டு பல சேவைகளை ஒழுங்கு செய்து ஏற்பாடு செய்து கொடுப்பதன் மூலம் நாங்கள் இதனைச் செய்கின்றோம்.

உடல்ரீதியான, உளரீதியான, சமூக, ஆன்மீக சேவைகள் உட்பட பல சேவைகளை ஏற்பாடு செய்து கொடுக்க முடியும்.

# எங்கே?

நோயாளி எங்கு விரும்புகின்றாரோ அங்கே இயலக்கூடிய அளவு நோவாற்றும் பராமரிப்பு வழங்கப்படும். இது பின்வருவனவற்றில் வழங்கப்படமுடியும்:

- நோயாளியின் சொந்த வீட்டில்
- பராமரிப்பவரின் வீட்டில்
- நேப்பியன், ஹோக்ஸ்பெறி, புளூமவுன்ரின்ஸ் அல்லது ஸ்பிறிங்வுட் வைத்தியசாலையில் அல்லது ஏதாவது சிகிச்சை இல்லத்தில் அல்லது விடுதியில்

குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரே பிரதான பராமரிப்பவர்களாவர். உங்களது பொது வைத்தியர், உங்களது நோவாற்றும் பராமரிப்புக் குழு ஆகியோரிடமிருந்து உயர் தொழிற் தகைமை சார்ந்த உதவியைப் பெறமுடியும்.

# நோவாற்றும் பராமரிப்பு என்பது ஒரு குழு முயற்சியாகும்.

- நோயாளியும் குடும்பமும் பராமரிப்பவரும்
- மருத்துவத் தாதி
- தொண்டர்
- வீட்டில் தங்கியிருக்கும் ஆதரவுச் சேவையாளர்
- மத குரு/மத அல்லது ஆன்மீகத் தலைவர்
- துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளும் ஆலோசகர்
- சமூக சேவையாளர், பயிற்சிச் சிகிச்சையாளர், தொழில் முயற்சிச் சிகிச்சையாளர், மருந்தாளுநர் உட்படவுள்ள பிற சுகாதாரப் பணியாளர்கள்
- பொது வைத்தியர்
- நோவாற்றும் பராமரிப்புக்கான விசேடத்துவ வைத்தியர்
- பிற சிகிச்சையளிக்கும் விசேடத்துவ வைத்தியர்கள்

# எனக்கு நோவு இருப்பின் அதைக் குறைக்கமுடியுமா?

அநேகமாக எல்லா நிலைமைகளிலும் மருந்துகளையும் அத்துடன் கதிர்வீச்சுச் சிகிச்சை, ஆலோசனை, ஒய்வு, தியானம் அல்லது உங்களுக்குப் பொருத்தமான ஏதாவது பிற முறை உட்படவுள்ள பிற சிகிச்சை முறைகளையும் பயன்படுத்தி நோவு குறைக்கப்படமுடியும் அல்லது இல்லாமல் செய்யப்படமுடியும்.

மருந்து வகைகள், அவை கொடுக்கப்படும் முறை உட்பட நோவுக்குச் சிகிச்சை அளிப்பதில் அண்மையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த விடயத்தில் உங்களது பொது வைத்தியரும் உங்கள் நோவாற்றும் பராமரிப்புச் சேவையும் மேலதிக தகவலை உங்களுக்குத் தரமுடியும்.

# எனது வாழ்நாளில் இறுதி நாள் வரை நான் எனது வீட்டில் வசிக்கமுடியுமா?

நீங்கள் தங்கியிருக்க விரும்பும் இடத்தில் உங்களுக்கும் உங்களைப் பராமரிப்பவருக்கும் ஆதரவு கொடுப்பதற்கு உங்களது நோவாற்றும் பராமரிப்புச் சேவை தம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்வார்கள். அது அடிக்கடி உங்களது சொந்த வீட்டிலாக இருக்கும்.

சில சமயங்களில் தேவைப்படும் பராமரிப்பு பராமரிப்பவரைக் களைப்படையச் செய்யலாம். இதன் காரணமாக நோயாளி பென்றித், புளூமவுன்ரின்ஸ் அல்லது ஹோக்ஸ்பெறி பிரதேசத்திலுள்ள ஏதாவது ஒரு

PALLIATIVE CARE SERVICES